பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 11 சனிக்கிழமை 27.09.2025 | அதிர்வு 58

## பெண்ணொருவர் கொடூரக் கொலை




பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வெலிக்கடை 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# மன்னாரில் பதற்றம்!

## மக்கள், அருட்தந்தையர்கள் மீது பொலிஸார் கொடூர தாக்குதல்




(எஸ்.ஆர். லெம்பேட்)

மக்களின் எதிர்ப்பையும் மீறி நூற்றுக் கணக்கான பொலிஸாரின் பாதுகாப்புடன் கலகம் அடக்கும் பொலிஸாரின் துணையுடன் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருள்கள் பாரிய வாகனங்களில் மன்னார் நகரை நோக்கி நேற்று இரவு முதல் இன்று அதி 04▶







# ட்ரம்பைச் சந்தித்த அநுர

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்ள நியூயோர்க் நகரத்துக்குச் சென்றிருந்த அரச தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த 23 ஆம் திகதி Lotte New York Palace ஹோட்டலில் வழங்கிய சிறப்பு இரவு விருந்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமோகமாக வரவேற்றதுடன், சிநேகபூர்வ உரையாடலின் பின்னர் இரு அரச தலைவர்களும் புகைப்படம் எடுக்கும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

# பி.பி.என்.ஜே. உடன்படிக்கையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி பங்கேற்பு!



தேசிய அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட பகுதிகளின் சமுத்திர உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பான சமுத்திர சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடன உடன்படிக்கையில் (பி.பி.என்.ஜே.) 60 ஆவது உறுப்பு நாடு இணைந்ததை முன்னிட்டு, பிரான்ஸ் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு, நேற்றுமுனன்தினம் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் அரச தலைவர்களின் பங்கேற்புடன் நியூயோர்க் நகரில் நடைபெற்றதுடன், இந்த உடன்படிக்கையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடான இலங்கையைப் பிரதிநிதித்துவபடுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அதில் கலந்து கொண்டார்.

இந்த உடன்படிக்கையில் இணைந்த 58 ஆவது உறுப்பு நாடாக, இலங்கை 2025 செப்டெம்பர் 16 ஆம் திகதி இந்த உடன்படிக்கையில் இணைந்ததுடன், இதன் மூலம் இந்த உடன்படிக்கையின் தரப்பு நாடாக மாறியது.

இரண்டு தசாப்த கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் சமுத்திர உயிரியல் பல்வகைமை தொடர்பான உடன்படிக்கை என்று அழைக்கப்படும் இந்த உடன்படிக்கையில் தற்போது 60 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதுடன், அது அந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வர வழிவகுத்தது.

உலக சமுத்திரங்களில் 2/3 பகுதியை உள்ளடக்கிய இந்த உடன்படிக்கை ஊடாக சமுத்திர உயிரியல் பல்வகைமையினைப் பாதுகாக்கவும், நிலைபேறான பயன்பாட்டிற்கும், சுதேச அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் அந்த உயிரியல் பல்வகைமையின் பயனைப் பகிர்ந்து கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த உடன்படிக்கை 2026 ஜனவரி 17 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வரவுள்ளது.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் பதவி உயர்வுகளுக்குப் பேரவை அங்கீகாரம்








யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசியரகவும், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆறு பேரைப் பேராசிரியர்களாகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த ரோசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசிரியராகவும், மருத்துவ பீடத்தின் சத்திர சிகிச்சையியல் துறை மற்றும் உடற்கூற்றியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரையும், கலைப்பீடத்தின் புவியியல் துறை, இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறை மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கே பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் செப்டெம்பர் 27 ஆம் திகதி சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த ரோசிரியர் ஜி. திருக்குமரன், பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சத்திர சிகிச்சையியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி, சிரேஷ்ட விரிவுரையாளரும் சத்திர சிகிச்சை நிபுணருமான சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா, உடற்கூற்றியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி துரைரட்ணம் செந்தூரன், புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சமஸ்கிருதத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவநேசன் சபா ஆனந் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தைச் சேர்ந்த ரோசிரியர் ஜி. திருக்குமரன் விவசாய உயிரியலில் சிரேஷ்ட பேராசியரகவும், மருத்துவ பீடத்தைச் சேர்நத சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி சிறுநீரகவியலில் பேராசிரியராகவும், சத்திர சிகிச்சை நிபுணர் சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா சத்திர சிகிச்சையியலில் பேராசிரியராகவும், உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி துரைரட்ணம் செந்தூரன் உடற்கூற்றியலில் பேராசிரியராகவும், புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா புவியியலில் பேராசிரியராகவும், சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாதசர்மா சமஸ்கிருதத்தில் பேராசிரியராகவும், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் உடற்கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.



## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை வரை கொண்டு வரப்பட்டன.

இதற்கு எதிராக நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து மன்னார் நுழைவு பகுதியில் வீதியை மறித்து மாபெரும் போராட்டத்தை நடத்தினர்.

நேற்று இரவு 10 மணி முதல் காற்றாலைக்கு எதிரான போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் பெண்கள், ஆண்கள் எனப் பலர் காயமடைந்தனர்.

மன்னாரில் காற்றாலை மின் செயற்றிட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்ற நிலையில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக காற்றாலைகளைத் தீவுக்குள் கொண்டு செல்வதற்கான முயற்சி இடம்பெற்றது.

இந்தநிலையில் காற்றாலை உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த வாகனங்களைப் போராடி அமைதியான முறையில் தடுக்க முயன்ற மக்கள் மீது பொலிஸார் கொடூரமான தாக்குதலை மேற்கொண்ட நிலையில் பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மக்களின் விருப்பத்துக்கு எதிராக எந்தவொரு திட்டத்தையும் செயற்படுத்த மாட்டோம் எனத் தெரிவித்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த மாதம் குழு ஒன்றை அமைத்து மக்களின் கருத்துக்களை உள்வாங்கி நல்ல ஒரு தீர்வை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி, மக்களின் எதிர்ப்பை மீறியும், மக்களின் கருத்துக்களை மதிக்காதும் தொடர்ச்சியாக காற்றாலை செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.



இந்தநிலையில் நேற்று இரவு 10 மணியளவில் முதல் கட்டமாக அமைதியான முறையில் காற்றாலை உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த வாகனங்களை மக்கள் தடுத்து நிறுத்த முற்பட்ட போதிலும் மக்களின் எதிர்ப்பை மீறி காற்றாலை உதிரிப்பாகங்கள் கொண்டு செல்லப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இரண்டாவது காற்றாலை உதிரிப்பாகங்கள் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் வீதிகளில் இறங்கி தடுக்க முற்பட்ட நிலையில் பொலிஸார் கொடூரமாக பெண்கள், அருட்தந்தையர்கள் என அனைவர் மீது தாக்குதல் மேற்கொண்டு கூட்டத்தைக் கலைக்க முற்பட்டனர்.

அதேநேரம் போராட்டக்காரர்களைத் தடுப்பதற்காக விசேட அதிரடிப் படையினரையும் பயன்படுத்தி ஆயுத முனையில் போராட்டக்காரர்களை அச்சுறுத்தி தாக்கி காற்றாலை உதிரிப்பாகங்களைக் கொண்டு சென்றனர்.

குறிப்பாக சில பெண்கள் மீது கால்களால் மிதித்தும் தடிகளால் அடித்தும் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைகாக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 15 பேரைக் கைது செய்வதற்கான அனுமதியை நீதிவானிடம் பொலிஸார் பெற்றனர். அவர்களில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மூவரைப் பொலிஸார் கைது செய்த நிலையில், அவர்களை மூவரையும் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட நீதிவான், மூவருக்கும் பிணை வழங்கினார். ஏனைய 12 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.





# போக்குவரத்து சட்டவிதிகளை மீறிய 20 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு!

## சம்மாந்துறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

பொது போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நகரப்பகுதி உட்பட புறநகர் பகுதிகளில் நேற்று விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள் எப்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஆவணம் காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் தலைக்கவசம் இன்றியும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி பயணித்தமை உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 20க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட அதனை ஓட்டிய சந்தேக நபர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சோதனை நடவடிக்கையானது அம்பாரை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே.இப்னு அஸார் வழிகாட்டலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப் குமாரவின் தலைமையில் மேற்கொள் எப்பட்டன.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொது போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மரத்துடன் மோதிய ஓட்டோ! பெண்ணொருவர் மரணம்!!

ஓட்டோ விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாய மடைந்தனர்.

இந்த விபத்து இரத்தினபுரி, கொலன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலிவாடிய பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வலக்கடை நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் ஓட்டோ சாரதி மற்றும் பின் இருக்கையில் இருந்த இரண்டு பெண்கள்



பலத்த காயமடைந்தனர்.

காயங்களுக்குள்ளானவர்கள் கொலொன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிகிச்சை பெற்று வந்த மற்றொரு பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்த பெண், உல்லிதுவாவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பில் கொலன்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண்ணொருவர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்கொடை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அங்கொடை , அக்கொன பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணுக்கும் எதிர் வீட்டில் வசிக்கும் நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பெண் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

எதிர் வீட்டில் வசிக்கும் நபரும், கொலை செய்யப்பட்ட பெண்ணும் ஒரே நிறுவனத்தில் பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து எதிர் வீட்டில் வசிக்கும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சர்வதேச நீதி கோரி 3 ஆவது நாளாகவும் தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று சனிக்கிழமை மூன்றாம் நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தப் போராட்டம் யாழ். செம்மணியில் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்துக்கு நீதி கோரியும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினவாதத்தின் விஷமத்தனம்

பொருளாதார நெருக்கடியில் மூழ்கி, அந்நிய செலாவணி ஈட்டலில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் இலங்கை, அந்த வெளிநாட்டு நாணய வருமானத்துக்கு உல்லாசப் பயணத் துறையைத்தான் இப்போது அதிகம் நம்பி இருக்கின்றது.

'தவிச்ச முயல் அடிப்பது போல' அந்த விடயத்திற்காக எல்லா வழிகளையும் அது நாடுகின்றது. தெற்கில் சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்காக முழு வசதிகளையும் செய்து, அகல வாசலைத் திறந்து வைத்துள்ள கொழும்பு அரசாங்கம், அந்தச் சுற்றுலாப் பயணிகள் விடயத்தின் மூலம் வடக்கு மேம்பட்டு விட அனுமதிக்கக் கூடாது என்ற பேரினவாத சிந்தனையில் மட்டும் முழு மூச்சாக - மிக இறுக்கமாக - இருக்கின்றது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை பொருளாதார மையமாக மாற்றி மேம்படுத்தும் திட்டத்திற்கு அனுமதிக்கவே மாட்டோம் என்று பேரினவாத சிந்தனையில் எக்காளமிடுகிறார் துறைமுகங்களுக்கும் பொறுப்பான அமைச்சரும் அரசுக்குள் வலிமையான பிரமுகருமான பிமல் ரத்நாயக்க.

மறுபுறம் வடக்குக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான நுழைவாயில்களாகக் கருதப்படும் காங்கேசந்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றை மேம்படுத்தி, அதிக சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு பதிலாக, அவற்றைக் கெடுக்கும் விதத்திலான திட்டமிட்ட விஷமத்தனமான நகர்வுகளே இப்போது முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக காங்கேசன்துறைத் துறைமுகம் தொடர்பில் இணையங்கள் மூலமாக எதிர்மறையான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை வடக்கை மூளை மையமாகக் கொண்ட தமிழர் தரப்புக்கு பெரும் ஏமாற்றம் தரும் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன.

சமீபத்திய சமூக ஊடகங்களில் பரவும்வீடியோக்கள்,துறைமுகத்திற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் சவால்களை எதிர்கொள்வதைக் காட்டுzகின்றன. பார்வையாளர்கள் இந்த அமைப்புகள் மோசமாகப் பராமரிக்கப்படுகின்றன எனவும், போதுமான வசதிகள் இல்லை எனவும், தெளிவற்ற நுழைவு நடைமுறைகள் இருக்கின்றனவும் விவரிக்கின்றனர்.

கடல் வழியாக வடக்கே வரும் சுற்றுலாப் பயணிகள், சேதமடைந்த உள்கட்டமைப்பு, துருப்பிடிக்கும் பகுதிகள் மற்றும் குறைந்த தூய்மையை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

அடிப்படைத் தேவைகளான நிழலான காத்திருப்பு பகுதிகள், சுத்தமான கழிப்பறைகள், சரியான அறிவிப்பு பலகைகள் மற்றும் தகவல் மேசைகள் ஆகியவை இல்லை அல்லது மோசமாக நிர்வகிக்கப்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வடக்கு இலங்கை ஒரு பொருளாதார மத்திய மையமாக மேம்படுவதற்கு எதிரான பேரினவாதிகளின் திட்டமிட்ட நடவடிக்கையாகவே காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் போன்றவற்றின் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் குரோத மனப்பான்மையோடு தடுக்கப்படுகின்றன. அவற்றுக்கு எதிரான இத்தகைய இணைய வழி பிரசாரங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழர் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் இலக்கோடு இந்தியா முன்வைக்கும் உதவித் திட்டங்கள் இந்தக் காரணத்திற்காகத்தான் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளினால் உதாசீனப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன.

இவ்விடயத்தில் இந்தியா ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய காலம் நெருங்கி வருவதாகவே தோன்றுகின்றது




# சம்மாந்துறையில் காட்டு யானைகள் தொல்லை உடன் நடவடிக்கை எடுக்க மக்கள் வலியுறுத்து

**(தில்சாத் பர்வீஸ்)**

சம்மாந்துறை பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மக்கள் தங்கள் உயிர் மற்றும் சொத்துகளை பாதுகாக்க அச்சத்துடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் சம்மாந்துறை உடங்கா 02 பகுதியில் காட்டு யானை ஒன்று வீட்டு மதில்களையும், கடை ஒன்றினையும், பயன் தரும் வாழை மற்றும் தென்னை மரங்களையும் சேதப் படுத்தியுள்ளது.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் வாழும் பொது மக்கள் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையால் அச்சம டைந்துள்ளார்கள்.

சம்மாந்துறை செந்நெல் கிராமம் 01, செந்நெல் கிராமம் 02 உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் காட்டு யானைகள் உட்பு குந்து வீட்டுத் தோட்டங்கள், வீட்டு மதில் கள், கடை அறைகள் போன்றவற்றை சேதப்படுத்திய சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

மேலும், தினமும் இரவு வேளையில் காட்டு யானைகள் நடமாடிக்கொண்டி ருக்கின்றமையால், பொது மக்கள் இரவு வேளைகளில் வெளியே செல்ல அச்சம டைந்துள்ளார்கள்.

பொதுமக்களின் பாதுகாப்பு, பாட சாலை மற்றும் மத்ரஸா செல்லும் மாண வர்களின் நிலை என்பன பெரும் கவலைக்குள்ளாகி இருப்பதாகவும், காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தி விரைவில் நிரந்தர தீர்வு காண வனஜீவராசி பாதுகாப்பு திணைக் களம் மற்றும் அரசு அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் வலியுறுத்துகின்ற னர்.

இந்நிலையில், சம்மாந்துறை பகுதியில் பல இடங்களில் காட்டு யானை களை கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி போன்ற தடுப்பும் நடவடிக்கைகள் மேற் கொள்ளுமாறு பொது மக்கள் பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக் கைகளை முன்வைத்த போதிலும், எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.














# மன்னார் காற்றாலைத் திட்டத்தை எதிர்த்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

**(கி.வசந்தன்)**

மன்னார் பகுதியில் நிறுவப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அங்கு பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைக்கு கண்டனம் வெளியிட்டும் வவுனி யாவில் நேற்று ஆர்பாட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டதுடன் துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

மக்கள் போராட்ட இயக்கம் மற்றும் வவுனியாமாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியன இணைந்து இந்தொ போராட்டத்தை முன்னெடுத் திருந்தன.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் –

மன்னாரில் கடந்த 56 நாள்களாகப் போராடி வரும் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் இந்த அரசு மக்களுக்கு விரோதமான முறையில் காட்டு மிராண் டித்தனமான செயற்பாட்டை முன்னெ டுத்துள்ளது. எனவே இந்த திட்டத்தை அரசு உணடியாக மீள்பரி சீலனை செய்ய வேண்டும். –என்றனர்.

வவுனியா பழைய பா நிலையப் பகுதி யில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப் பட்டது. அங்கிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் பொதுமக்க ளுக்கு துண்டுபிரசுரங்களை வழங்கிவைத்தனர்.
























# விசர் நாய்கடி விழிப்புணர்வு நிகழ்வு

உலக நீர்வெறுப்பு நோய் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் விசர் நாய்கடி தொடர்பான விசேட விழிப்புணர்வு நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டது.




# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்தத் திருவிழா!

வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் ஆறாம் திகதி திங்கட்கிழமை பாம்பு திருவிழாவும், ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பல் திருவிழாவும், 8 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும், ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும், 11 ஆம் திகதி சனிக்கிழமை கேணித்தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரும் பரிபாலன சபையினரும் அறிவித்துள்ளனர்.

# நற்பிட்டிமுனை மாணவர்களின் உயிருக்கு ஆபத்தான நிலையில் கழிவுநீர் வடிகான்!

## பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் அவல நிலைக்குத் தீர்வு கிடைக்குமா

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை பகுதியில் உள்ள கழிவு நீர் வடிகான் உரிய முறையில் மூடப்படாமை காரணமாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாக மாணவர்களின் பயன்பாட்டில் உள்ள நற்பிட்டிமுனை -03 ஆலையடி வடக்கு வீதியில் உள்ள குறித்த வடிகானில் மூடி இன்மை காரணமாக அந்தப் பகுதியில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.



இந்த வடிகான்கள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களின் நிலைமையை அறிந்து குறித்த வடிகானின் மூடிகளை நிர்மாணித்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.




# முல்லை கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துக!

## தவறினால் மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மிகவும் பாரிய அளவில் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அவ்வாறு அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுக்கத் தவறினால் மீனவக் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளவேண்டிய அவல நிலை ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (26) உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கடற்பரப்பில் பாரிய அளவில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சருக்கும் எம்மாலும், எமது மீனவர்களாலும் ஏற்கனவே முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் எமது கடற்பரப்பில் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் முறைப்பாட்டுக்கு அமைய கடந்த 15 ஆம் திகதி இரவு மீனவர்களுடன் இணைந்து படகுகள் மூலம், ஏறத்தாள 15 கிலோ மீற்றர் தூரமளவில் கடலுக்குள் சென்று சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறும் விதம் பற்றிய நிலமைகளைப் பார்வையிட்டிருந்தேன்.

அந்தவகையில் ஏறத்தாள ஆயிரம் படகுகள் அளவில் முல்லைத்தீவு கடற்பரப்பில் மிகமோசமாக வெளிச்சத்தைப் பாய்ச்சி திருட்டுத் தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட



சட்டவிரோத தொழில்களே அங்கு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன.

இவ்வாறு நான் மீனவர்களுடன் சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை வெளிக்கொணர்ந்ததை அடுத்து கடற்றொழில் அமைச்சர் உடனடியாக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்தும்படி கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், இந்தச் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கடற்படையினரோ, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரோ கவனத்திலெக்கவில்லை. ஏன் கடற்படையினர் கடற்படையினர் ஆழ்ந்த தூக்கத்தில் உள்ளார்களா?

இந்த சபையில் தற்போது பாதுகாப்பு பிரதி அமைச்சர் இல்லை எனினும் இந்த விடயத்தை பாதுகாப்பு பிரதி அமைச்சரதும் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

நிச்சயமாக ஊழலை ஒழிப்போம், ஊழலை ஒழிப்போமென சொல்லிக் கொண்டு தேசிய மக்கள் சக்தி அரச செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இப்படியான ஊழல்கள் எவ்வித ஒழிவு மறைவுமின்றி தெட்டத் தெளிவாக அனைவருக்கும் தெரிகின்ற விதத்தில் இலங்கைக் கடற்பரப்பிலேயே இடம்பெற்று வருகின்றன. அதாவது ஆயிரம் படகுகளுக்கும் மேல் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு எமது கடற்பரப்பைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் இந்த விடயத்துக்கு என்ன பதிலைக் கூறப்போகின்றார். கடற்றொழில் அமைச்சர் இந்த விடயத்துக்கு என்ன பதிலைச் சொல்லப் போகின்றார். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களங்கள் என்ன பதிலைச் சொல்லப் போகின்றன.

இவ்வாறு எமது கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்க, எமது அப்பாவி மீனவர்கள் தொழிலின்றி கடற்கரைகளிலே கூடி நின்று ஏக்கத்துடன் வேடிக்கை பார்க்கின்ற அவல நிலையே எமது பகுதிகளில் காணப்படுகின்றன.

இவ்வாறாக சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் எமது கடற்பரப்பு எங்கும் இடம்பெறுவதால், எமது அப்பாவி மீனவர்களால் உழைக்கமுடியவில்லை.

அந்த அப்பாவி மீனவர்களின் குடும்பங்களைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எமது மீனவர்கள் தமது பிள்ளைகளை கல்வி கற்பிப்பதில்லையா, அவர்கள் அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில்லையா.

இவ்வாறாக கடற்பரப்பெங்கும் சட்ட விரோதிகள் சட்டவிரோத கடற்றொழில்களை மேற்கொண்டு எமது அப்பாவி மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடிச் செல்கின்றனர்.

இத்தகைய திருட்டுத் தொழில்களை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை. கடற்றொழில் அமைச்சர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கூடுதல் கவனமெடுக்கவேண்டும்.

இவ்வாறு கடற்பரப்பில் அதிகரித்துக் காணப்படும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை உடனடியாக முற்றாக தடுத்து நிறுத்துங்கள்.

அவ்வாறு தடுத்து நிறுத்தத் தவறினால் அப்பாவி மீனவக் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் ஏற்படும். எனவே இவ்விடயத்தில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

# காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஆசிரியர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பு!

காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஆசிரியருக்கு மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (26) சாவகச்சேரி மருத்துவ மனையில் இடம்பெற்றது.

இரு தினங்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலையைச் சேர்ந்த ஞானகிரி என்னும் ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் தென்மராட்சி பிரதேசத்தில் பிரபல புலமைப்பரிசில் பாட ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.






# இலங்கை டிஜிட்டல் யுகத்துக்கு இலத்திரனியல் அட்டை தயாராகிறதா?

"மாற்றம் ஒன்றே மாறாதது" ஆம் இலங்கையில் 2026 ஆம் ஆண்டில் பல மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன. அதில் ஒன்றே இலத்திரனியல் அடையாள அட்டை (E-NIC). இலத்தினியல் அடையாள அட்டை என்பது தேசிய அடையாள அட்டையை நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துகின்ற ஒரு திட்டமாகும். பாலிகார்பனேட் எனும் ஒரு வகை பிளாஸ்டிக் அட்டையில் இவை தயாரிக்கப்படுகின்றன. நீர் மற்றும் வெப்பத்தால் பாதிப்படையாத தன்மை கொண்டதாக இருப்பதோடு, இதில் ஒரு சிப் அல்லது மைக்ரோசிப் பொருத்தப்பட்டிருக்கும் சிப்பில் தனிநபரின் பெயர், முகவரி, பிறந்த திகதி போன்ற வழக்கமான தகவல்களுடன் கைவிரல் அடையாளம், முக அங்கீகாரம், விழித்திரை ஸ்கேன் போன்ற பயோமெட்ரிக் தரவுகளும் சேமிக்கப்பட்டு இருக்கும். தகவல்கள் லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் பொறிக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான ஒரு முயற்சி ஏன் இலங்கைக்கு வருகின்றது என்ற கேள்வி பலரது மனதிலும் உதித்துள்ளது. உலகம் தொழில்நுட்ப ரீதியில் முன்னேறி செல்கின்றது நாமும் அத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சிக்குள் பழகிக்கொள்வது அவசியமானது. இலங்கை மற்றும் இந்தியாவுக்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த மூலம் இந்தியாவின் ஆதார் (யுயனாயயச உயசன) திட்டத்தை மாதிரியாகக் கொண்டு இது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் தரவு பாதுகாப்பு குறித்த கவலை காரணமாக திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது. இந்தத் திட்டம் அமைச்சர் அநுர குமார திசாநாயக்க மற்றும் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலத்திரனியல் அடையாள அட்டை திட்டம் கொண்டுவரப்படும் என கூறப்படுகின்றது.

இவ்வாறான திட்டங்கள் இந்தியா, மலேசியா, ஜப்பான், ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய ராச்சியத்தில் தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டு குறைந்த காலப் பகுதிக்கு பின்னர் கைவிடப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தின் மூலம் வங்கிச் சேவை, அரச மானியங்கள் பெற்றுக் கொள்ளுதல், வாக்காளர் பதிவு மற்றும் சமூக நலத் திட்டங்கள் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த திட்டம் ஏன் இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்றது என்ற கேள்விக்கு இலங்கையில் நடைபெறும் மோசடியை தடுப்பதற்கும், அரச சேவைகளை இலகுபடுத்துவதற்கும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் என்ற பதிலே கிடைக்கின்றது. ஒரு நவீன மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு மாறுவதற்கு இந்த இலத்திரனியல் அட்டை ஒரு முக்கிய படியாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

தகவல் சரிபார்ப்புக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒருவரின் அடையாளத்தை உடனடியாகவும் துல்லியமாகவும் சரிபார்க்க முடியும். இதனால் மோசடி குறைவடையும். வங்கி சேவை, கடவுச்சீட்டு விண்ணப்பம், அரச சேவைகள் போன்ற நடவடிக்கைகளை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்ளவும் சேவையை விரிவுபடுத்தவும் முடியும். பயோமெட்ரிக் தகவல் இருப்பதால் அடையாள அட்டையை வேறு ஒருவர் பயன்படுத்துவதை தடுக்க முடியுமாக இருப்பதோடு பாதுகாப்பானதாகவும் அமையும். மக்களின் தகவல் ஒரு மையப்படுத்தப்பட்ட தரவு தளத்தில் சேமிக்கப்படும் போது தகவல் ஒருங்கிணைப்பால் அரச நிர்வாகத்தை மேம்படுத்த உதவும்.


இல்லத்திரனியல் அட்டை செயற்றிட்டம் முழுவதும் நன்மையாக அமையுமா? என்றால் இல்லை பாதகமான விளைவுகளும் உண்டு. தனிநபர் தரவு பாதுகாப்பானது தரவுத்தளம் ஹேக் செய்யப்பட்டால் கோடிக்கணக்கான மக்களின் இரகசியம் திருடப்படும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. உரிமை மீறல் ஏற்படும், ஒரு குடிமகனின் அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் சேமிப்பது தனி நபரின் தனி உரிமைக்கு அச்சுறுத்தலாக அமையும். இந்தச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த அதிக செலவு ஏற்படும். பொருளாதார நெருக்கடி உள்ள இலங்கைக்கு கூடுதல் சுமையாக இது அமைய வாய்ப்புண்டு.

தொழில்நுட்ப உலகை நோக்கி மக்களை அழைத்துச் செல்வதற்கு இந்தச் செயற்றிட்டம் நன்மையானதாக இருந்தாலும் விமர்சனங்களும் எழுந்தவண்ணமே உள்ளன. இவை தொடர்பாகத் தனிநபர் உரிமைகள் மற்றும் தகவல் பாதுகாப்பு தொடர்பான குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைத்துக் கொண்டே வருகின்றன. தரவு பாதுகாப்பு அரசின் கைகளில் சேரும்போது, இவ்வளவு பெரிய தரவு தொகுப்பை பாதுகாக்க போதுமான பாதுகாப்பு வழிமுறை அரசிடம் உள்ளதா? என்ற கேள்வியை அவர்கள் எழுப்பி உள்ளார்கள். அதிகார துஷ்பிரயோகம் ஏற்படும், அரசு தவறாக பயன்படுத்தக்கூடும் போன்ற சந்தேகங்கள் மக்கள் மனதிலும் எழுந்துள்ளன.

இந்தத் திட்டம் இலங்கைக்குள் 2026 இல் கொண்டு வரப்படும் என்று கூறப்படுகின்றது. இதனுடைய செயல்பாடுகளாக 7 லட்சம் பாலிகார்பன் அட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதுடன் "தாலெஸ்" (வுயடநள) என்ற நிறுவனம் இந்தச் செயற்றிட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றது.

மாறி வருகின்ற தொழில்நுட்ப உலகில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிறந்த விடயம் எனினும் அதன் சாதக, பாதகங்களைத் தெரியப்படுத்துவதும் தெரிந்து கொள்வதும் பிரஜைகள் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

**செ.அனுத்திரா,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# கப்பல் கட்டுமானத் துறையில் இந்தியா முன்னணி நாடாகும்

## மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் தகவல்




2047 ஆம் ஆண்டில் கப்பல் கட்டுமானத் துறையில் உலக அளவில் இந்தியா முன்னணி நாடாகத் திகழும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு கடற்கரைச்சாலை செம்மஞ்சேரியில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் 10 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

இதில் மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் பங்கேற்று, பல்கலை. அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ – மாணவிகளுக்கு தங்கப்பதக்கங்கள் அணிவித்து, பட்டங்களை வழங்கினார். வெவ்வேறு படிப்புகளில் 2,196 பேர் பட்டம் பெற்றனர்.

இதன்போது மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் உரையாற்றுகையில்,

“உலக அளவில் கப்பல் போக்குவரத்துக்கு தேவையான மனித வளத்தை இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் உருவாக்கி வருகிறது.

இத்துறையில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாகி வருவதால், கப்பல் போக்குவரத்து சார்ந்த படிப்புகளை படிக்கும் மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. கடந்த 10 ஆண்டுக்கு முன்பு நம் நாட்டில் 1.25 லட்சமாக இருந்த மாலுமிகளின் எண்ணிக்கை தற்போது 3 லட்சமாக அதிகரித்துள்ளது.

கப்பல் கட்டுமானத் துறையில் 2047 இல் உலகின் 5 முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கும். அதற்கான உத்திகள் மற்றும் செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, உலகளாவிய உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. கப்பல் கட்டுதல், பழைய கப்பல்களை உடைத்தல் மற்றும் மறு சுழற்சி செய்தல் போன்ற தொழில்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது. இதற்காக விசாகப்பட்டினத்தில் சிறப்பு தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டுள்ளது.

கடல்சார் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு 70 ஆயிரம் கோடி இந்திய ரூபா ஒதுக்கியுள்ளது. அண்மையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், கடல் சார்ந்த 3 அம்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது இந்திய கப்பல் போக்குவரத்து துறையில் பெரிய எழுச்சியை உண்டாக்கும்.” என்றார்.

# இந்தியர்கள் 2,417 பேரை நாடு கடத்திய அமெரிக்கா

## மத்திய அரசு தகவல்



கடந்த ஜனவரியில் இருந்து அமெரிக்கா 2,417 இந்தியர்களை நாடு கடத்தி இருக்கிறது என இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ரந்திர் ஜெய்ஸ்வால், “இந்தியர்கள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வதை எதிர்ப்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. அதே நேரத்தில், சட்டப்பூர்வமாக வெளிநாடுகளுக்குச் செல்வதை அரசு ஊக்குவிக்கிறது. கடந்த ஜனவரியில் இருந்து அமெரிக்கா 2,417 இந்தியர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தி இருக்கிறது அல்லது திருப்பி அனுப்பி இருக்கிறது.

சட்டவிரோதமாக இந்தியர்கள் தங்கள் நாட்டில் இருப்பதாக ஒரு நாடு கூறுமேயானால், நாங்கள் அத்தகைய நபர்களின் ஆவணங்களைச் சரிபார்க்கிறோம். சட்டப்பூர்வமற்ற முறையில் இந்தியர்கள் வெளிநாடுகளில் தங்கி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களை திரும்ப அழைத்துக் கொள்கிறோம்.

சட்டவிரோத இடப்பெயர்வு, சட்டப்பூர்வமான இடப்பெயர்வுக்கான அரசின் முயற்சியை பலவீனப்படுத்துகிறது. எனவே, சட்டவிரோத இடப்பெயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு, மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. சட்டப்பூர்வ குடியேற்றம் குறித்து நாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வேலைவாய்ப்புகளில் இருந்து விலகி இருக்குமாறு நாங்கள் இந்தியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறோம்.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியிருப்போர் விவகாரத்தில், நாங்கள் அமெரிக்க அரசுடன் நெருக்கமாக ஒத்துழைத்து வருகிறோம். தேசியத்தை உறுதிப்படுத்திய உடன் அவர்களை நாங்கள் திரும்ப அழைத்துக்கொள்கிறோம். அவ்வாறு இந்தியா திரும்பிய இந்தியர்களில் 62 சதவீதம் பேர் வணிக விமானங்களில் வந்துள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள இந்திய மணவர்களின் நலன்களுக்கு மத்திய அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் புதுப்பிக்கப்பட்ட விசா முறைகள் குறித்து நாங்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். விசா வழங்குவது என்பது இறையாண்மை தொடர்புடைய ஒன்று என்பதை நாங்கள் அறிவோம். இந்திய மாணவர்களின் விண்ணப்பம் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படுகின்றன. இதன்மூலம், அவர்கள் சரியான நேரத்தில் தங்கள் கல்வி நிலையங்களில் சேர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.” என தெரிவித்தார்.

# நெதன்யாகுவின் உரை அப்பட்டமான பொய்

## ஹமாஸ் அறிவிப்பு

நெதன்யாகுவின் உரையை அப்பட்டமான பொய்கள் என்று ஹமாஸ் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று உரையாற்றினார்.

அவருடைய உரையில் பலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் செயலை விமர்சித்திருந்ததுடன் பல விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

இந்நிலையில் அவருடைய உரையை விமர்சிக்கும் வகையில் ஹமாஸ் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பட்டமான பொய்கள் மற்றும் முரண்பாடுகள் கொண்ட ஒரு தவறான உரையை நெதன்யாகு நிகழ்த்தியுள்ளார் என ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

பொய்கள் ஒருபோதும் உண்மையை மாற்றாது எனவும் ஹமாஸ் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நெதன்யாகுவின் உரையைப் புறக்கணிப்பது இஸ்ரேலின் தனிமைப்படுத்தலின் ஒரு வெளிப்பாடாகும், மேலும் அழிப்புப் போரின் விளைவுகளும் ஆகும் என ஹமாஸ் மூத்த




தலைவர் தாஹெர் அல்-நுனு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று உரையாற்றிய போது அரங்கத்தில் அமர்ந்திருந்த பிரதிநிதிகள் எழுந்து வெளியேறியதோடு பலஸ்தீனியர்களை இனப்படுகொலை செய்வதாகவும் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில் பிரதிநிதிகள் யாருமற்ற நிலையில் வெறிச்சோடிய ஐ.நா சபை பொதுக்கூட்டத்தில் நெதன்யாகு உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளின் மருந்துகள் இறக்குமதிக்கு 100 வீத வரி விதித்தார் டொனால்ட் ட்ரம்ப்

இந்தியா உட்பட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருள்களுக்கு ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே இந்தியப் பொருள்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், மருந்துப் பொருள்களுக்கு 100 சதவீத வரி விதிக்கப்பட்டிருப்பது அமெரிக்க ஜனாதிபதியின் அடுத்த தாக்குதலாக பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். அவர் பதவியேற்றது முதல், பல்வேறு நாடுகள் மீது சரமாரியாக இறக்குமதி வரி விதிப்பை அறிவித்து வருகிறார். இந்தியா, சீனா, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கூடுதல் வரியையும் அவர் அறிவித்தார்.

முதலில் இந்தியப் பொருள்களுக்கு 25 சதவீத வரியை விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் அறிவித்தார். இந்தியா அதை ஏற்காததால், கூடுதலாக 25 சதவீத வரியை இந்தியா மீது விதித்தார். இதனால், இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவில் 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதனால், இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுளது.

இதற்கிடையே, வர்த்தகம் தொடர்பாக அமெரிக்க அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் அமெரிக்கா சென்றுள்ளார். அவருடன் வர்த்தகத் துறை சிறப்பு செயலர் ராஜேஷ் அகர்வால் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளும் சென்றுள்ளனர். அமெரிக்க அரசின் வர்த்தகத் துறை அமைச்சருடன், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தொடர்ந்து வர்த்தகம் மற்றும் வர்த்தகம் சாராத விவகாரங்கள் குறித்து பல்வேறு கட்டங்களாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தையை முடித்துவிட்டு மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையிலான குழுவினர் இந்த



வார இறுதியில் இந்தியா திரும்ப உள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டணி நாடாக அமெரிக்கா இருந்து வருகிறது. இந்தியாவின் மொத்த பொருள்கள் ஏற்றுமதியில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி சுமார் 18 சதவீதமாகவும், இறக்குமதி 6.22 சதவீதமாகவும் உள்ளது. இந்தியாவின் மொத்த வணிக வர்த்தகத்தில் 10.73 சதவீதம் அமெரிக்காவை சார்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருள்களுக்கு 100 சதவீத வரி விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் திடீரென அறிவித்துள்ளார். அதேநேரம், அந்த மருந்து நிறுவனங்கள் அமெரிக்காவில் தொழிற்சாலைகளை அமைத்திருந்தால் அந்த நிறுவனங்களுக்கு இந்த வரி பொருந்தாது என்றும் அறிவித்துள்ளார்.

மேலும், சமையலறை உபகரணங்கள், குளியலறை, கழிப்பறை உபகரணங்கள் மீது 30 சதவீத இறக்குமதி வரி, பர்னிச்சர் பொருள்கள் மீது 25 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படுவதாகவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்த கூடுதல் இறக்குமதி வரி விதிப்பு ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வர உள்ளது.

ட்ரம்பின் இந்த அறிவிப்பால் இந்திய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பெரும் பாதிப்பை சந்திக்கும் என தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கா உடனான வர்த்தகத்தை மிகவும் சார்ந்திருக்கும் உள்நாட்டுத் தொழில்களில் ஒன்றான இந்தியாவின் மருந்து துறை, ட்ரம்பின் இந்த திடீர் தாக்குதால் பெரிய அளவில் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

சனிக்கிழமை | 27/09/2025

## பிரதமர் மார்க் கார்னி லண்டனுக்கு விஜயம்

கனேடியப் பிரதமர் மார்க் கார்னி இங்கிலாந்தின் லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

பிரதமர் கார்னி, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா,

03




# கனடா முழுவதும் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர் தபால் பணியாளர்கள்

**கனடா தபால் துறை பணியாளர்கள் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள்.**

**பின்னணி கனடா தபால் துறைக்கு பொறுப்பான அமைச்சரான ஜோயல் லைட்பவுண்ட், கனடா தபால் துறை திவாலாகும் நிலையிலுள்ளதாகக் கூறி, தபால் துறையில் பல்வேறு மாற்றங்களை அறிவித்துள்ளார்.**

வீடுகளுக்கு தபால் வினியோகம் செய்வதை நிறுத்துவது, அவசர தபால்கள் தவிர்த்து பிற தபால்களை விமானத்தில் கொண்டு செல்வதற்கு பதிலாக ரயிலில் கொண்டு செல்வது, கிராமப்புற தபால் நிலையங்களை மூடுவதற்கான தடையை நீக்குவது ஆகிய மாற்றங்களைச் செய்ய முடிவு செய்துள்ளதாக ஜோயல் அறிவித்துள்ளார்.

மக்களிடம் நேரடியாக தபால்களை கொண்டு கொடுப்பது அவர்கள் நலம் குறித்து அறிந்துகொள்வதற்கும் உதவியாக இருக்கும் என்று கூறும் தபால் ஊழியரான டேனியல் ப்ரையன்ட் என்பவர், வீடு வீடாக தபால் கொடுக்க போகும்போதே அந்த வீட்டிலுள்ளவர்கள் நலமாக இருக்கிறார்களா, அவர்களுக்கு ஏதேனும் தேவைகள் உள்ளனவா என்பதையும் அறிந்துகொள்வோம். இனி அது சாத்தியப்படாது என்பது வருத்தமே என்கிறார்.

தபால் துறையில் மாற்றங்கள் குறித்த அமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து, தபால் ஊழியர்கள் யூனியனான The Canadian Union of Postal Workers (CUPW), கனடா முழுவதும் பணியாற்றும் தபால் துறை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர் என அறிவித்துள்ளது.























# கனடாவில் பிஸ்தா உட்கொண்ட 105 பேருக்கு உடல் நலம் பாதிப்பு

கனடாவில் பிஸ்தா மற்றும் பிஸ்தா சேர்த்த இனிப்பு வகைகளை உட்கொண்ட 105 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளனர் என கனடா பொது சுகாதார ஏஜன்சி தெரிவித்துள்ளது.

பிஸ்தா, பிஸ்தா சேர்க்கப்பட்ட பக்லாவா என்னும் இனிப்பு, ஐஸ்கிரீம் மற்றும் சொக்லேட்களில் சால்மோனெல்லா என்னும் நோய்க்கிருமிகளின் தாக்கம் இருந்ததாலேயே அவற்றை உட்கொண்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்டவர்களில் 16 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு நிலைமை மோசமாக இருந்துள்ளது.

சில பிராண்ட் பிஸ்தா மற்றும் பிஸ்தா சேர்த்த இனிப்பு வகைகள் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்துள்ள கனடா உணவு ஆய்வு ஏஜன்சி, அது குறித்த விவரங்கள் தங்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட பிஸ்தா உணவுகளை வாங்கியோர் அவற்றை குப்பையில் வீசிவிடவோ அல்லது வாங்கிய கடைகளிலேயே திருப்பிக் கொடுத்துவிடவோ செய்யுமாறு கனடா உணவு ஆய்வு ஏஜன்சி அறிவுறுத்தியுள்ளது.




# தேர்தல் பிரசாரம் செய்த வெளிநாட்டு மாணவர்கள்

## கனடாவில் குற்றச்சாட்டு

கனடாவுக்குக் கல்வி கற்க வந்த வெளிநாட்டு மாணவர்களை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக கல்லூரி ஒன்றின்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டவரான யானிசா (வயது 25), என்னும் மாணவி, 2024 ஆம் ஆண்டு, கனடாவின் மெட்ரோ வான்கூவரிலுள்ள Pacific Link College என்னும் கல்லூரியில் டிஜிட்டல் மீடியா கற்பதற்காக வந்துள்ளார்.

ஆனால், 2024 டிசம்பரில், கல்லூரியில் பாடம் எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக, கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த Tamara Jansen என்பவருக்காக தேர்தல் பிரச்சாரம் செய்யுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வீடு வீடாகச் சென்று Tamara Jansenக்கு ஆதரவாக துண்டுப் பிரதிகள் கொடுக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கிறார் யானிசா.

தாங்கள் Tamara Jansencila பிரச்சார அலுவலகத்துக்குச் சென்றதற்கும், வீடுவீடாக சென்று துண்டுப் பிரசுரம் கொடுத்ததற்கும் ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பிக்கவேண்டும், இல்லையென்றால் வகுப்பில் Attendance கொடுக்கப்படாது என்றும், அவர்கள்ியளள ஆக்கப்பட மாட்டார்கள் என்றும் மாணவ மாணவியருக்கு கூறப்பட்டுள்ளது.

இது தங்கள் பாடத்திட்டத்திலேயே இல்லை என்பதை அறிந்த யானிசாவும் இன்னொரு வெளிநாட்டு மாணவியும் அது குறித்து தங்கள் ஆசிரியரிடம் கூற, அவரோ இது நாளை நீங்கள் கனேடிய குடிமகனாக குடிமகளாக ஆவதற்கு உதவும் என்று கூறியுள்ளார்.

## பிரதமர் மார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டென்மார்க், ஸ்பெயின், ஐஸ்லாந்து நாடுகளின் தலைவர்களுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

வர்த்தகம், பரஸ்பர பாதுகாப்பு, உக்ரைன் போருக்கு எதிரான நடவடிக்கைகள், இஸ்ரேல் – ஹமாஸ் மோதல், ஆர்க்டிக் பாதுகாப்பு போன்ற முக்கிய அம்சங்கள் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் கூறுவதன்படி, இந்தப் பயணத்தின் நோக்கம் வர்த்தகம், வணிகம், பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முகமாக நேரடி சந்திப்புகள் நடத்துவதாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவை அதிகமாக நம்பிக்கொள்வதைத் தணிக்க கனடா முயற்சிக்கிறது எனவும் வலியுறுத்தப்பட்டது.

கார்னி, பிரிட்டிஷ் பிரதமர் கியர் ஸ்டார்மர் மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர் ஆந்தனி ஆல்பனீஸ் பங்கேற்கும் மாநாடு ஒன்றில் பங்கேற்க உள்ளார்.

எனினும், கனடாவின் கன்சர்வேடிவ் கட்சி கார்னியின் இந்த வெளிநாட்டு பயணங்களை விமர்சித்து வருகிறது. “நாட்டிற்கு எந்தத் தெளிவான பலனையும் கொண்டுவரவில்லை” என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



# கனடாவை கடுமையாக சாடினார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கனடா உள்ளிட்ட பல நாடுகளை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உரையாற்றியபோது அவர் இவ்வாறு விமர்சனங்களை வெளியிட்டுள்ளது.

இந்த உரையின் போது பல நாடுகளின் தூதர்கள் இஸ்ரேலை எதிர்க்கும் நோக்கில் மண்டபத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

பாலஸ்தீன அரசை அங்கீகரித்த கனடா போன்ற நாடுகளின் நடவடிக்க அவமானகரமான முடிவு என நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் யூதர்களுக்கு எதிரான தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் கடும் குண்டுவீச்சு, பசிபிக்கும் பொதுமக்களுக்கு உணவுக் குறைபாடு, மேலும் சமீபத்தில் கத்தாரில் ஹமாஸ் பேச்சுவார்த்தை நடத்துவோரின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் காரணமாக இஸ்ரேல் உலகளவில் கடுமையான விமர்சனங்களை சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.